## பாவம் தலைவர்கள்!

வாசிக்க: சங்கீதம் 35:18-28

***"ஆயனை வெட்டு; ஆடுகள் சிதறடிக்கப்படும்" (மத் 26:31; சக 13:7)***

எல்லாக் கிறிஸ்தவர்களுமே பாடுகள் உபத்திரவங்கள் வழியாய்ப் போகவேண்டியதிருந்தாலும், கிறிஸ்தவ ஊழியத்திலிருப்பவர்களும் தலைவர்களும் பிசாசின் முக்கிய குறியாவர். மரத்தைக் காலிபண்ணவேண்டுமானால் இலைகளையா பறிப்போம், கிளைகளையா வெட்டுவோம்? கோடரியை மரத்தின் "வேர்" அருகே அல்லவோ வைப்போம்? முப்பதாண்டுகளுக்குமேல் கிறிஸ்தவத் தலைமைத்துவத்தில் இருந்துவிட்ட நான் சொல்லுவது: தலைவர்களைப் பார்த்துப் பொறாமை கொள்ளாதீர்கள், பரிதாபப்படுங்கள்! பக்தியுள்ள தலைவர்கள் தங்கள் பொறுப்புகளுக்குத் தாங்களாகவே தெரிந்துகொண்டோ, ஆசனங்களைப் பிடித்துக்கொண்டோ வந்து சேரவில்லை. கடவுள்தான் கட்டாயப்படுத்தி அவர்களை அங்கு அமர்த்தினார். இவ்விதப் பொறுப்புகளை ஏற்காதிருக்க அவர்கள் கொடுக்கும் சாக்குப் போக்குகளை ஆண்டவர் ஒத்துக்கொள்ளுவதில்லை (யாத் 4:10-13; எரே 1:4-9).

எப்பொழுதும் அழுத்தும் பொறுப்புகளின் பாரம், பிரச்னைகளினால் தூக்கமில்லாத இரவுகள், அடிக்கடி பயணங்கள், அதிக வேலை, மக்களின் அளவுக்குமீறிய எதிர்பார்ப்புகளால் உண்டாகும் நெருக்கம், உடன் ஊழியரிடையே ஒத்துழைப்பின்மை, சண்டைகள், சுவிசேஷத்தின் எதிரிகளிடமிருந்து வரும் பயமுறுத்தல்கள், பண நெருக்கடி, குடும்பப் பிரச்னைகள், திரும்பத் திரும்ப வரும் சோதனைகள், இன்னும் இதுபோன்ற ஏராளமான காரியங்கள் தலைவர்களது உடலைக் களைப்படையச்செய்து, மனதை விரக்தியடையப்பண்ணி, ஆன்மாவைப் பலமிழக்கச் செய்துவிடுகின்றன. "போதும் ஆண்டவா, என் உயிரை எடுத்துக்கொள்ளும்" என்று தீர்க்கன் எலியா போன்ற வீரதீரப்புலிகள்கூட கதறுவதில் ஆச்சரியமில்லையே! (1 இரா 19:4).

மேய்ப்பனை வெட்டும் சாத்தானின் திட்டம் இந்தக் கடைசி நாட்களில் வலுப்பெற்றுவருகிறது. பாதி ஊழியருக்குமேல் தீராத வியாதி; பயங்கரமான விபத்துகளில் ஊழியர் சிக்குவது சகஜம்; குடும்பப் பிரிவினைகளும் நடத்தை கெடுவதும் சர்வ சாதாரணம்; ஊழல் மலிவு. பிரசங்கிமார் அபூர்வப் பிறவிகளல்ல, அவர்களும் சாதா மனிதர்தான் என்ற அறிவு இப்பொழுதுதான் மக்களுக்கு உதித்திருக்கிறது. மக்களுக்காய் ஊழியர் போதுமான அளவு ஜெபித்துவிட்டனர். இப்பொழுது ஊழியருக்காய் மக்கள் ஜெபிக்கவேண்டிய காலம்.

தனிமையெனும் சிலுவையே தலைவர்களுக்கு மிகமிகப் பளுவானது. தாம் கசப்பான பாத்திரத்தில் பருகுவதற்காய் ஆயத்தப்பட்டுக்கொண்டிருந்த வேளையில் ஆண்டவரது சீடரோ முதன்மைக்கும் பதவிக்கும் போட்டாபோட்டி போட்டுக்கொண்டிருந்தனர். அவர் இரத்த வியர்வை சிந்திக்கொண்டிருக்கையில் அவர்கள் அயர்ந்து தூங்கிவிட்டனர். பாதுகாப்புத் தூதர்கள்கூட கொஞ்ச நேரம் அங்கு இல்லை. கடவுளும் தன்னைக் கைவிட்டுவிட்டாரோ என்று சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த இயேசுவுக்குத் தோன்றிற்று. நண்பரே, தலைவர்களை உற்சாகப் படுத்தவும் அவர்களுக்குப் புத்துணர்வூட்டி உதவவும் உங்களாலான அத்தனையையும் செய்யுங்கள். அவர்கள் நன்றாயிருந்தால் நீங்கள் நன்றாயிருப்பீர்கள்!